# மீள்குடியேற்றத்தின் பின்னா் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகள் : ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு.

சுபாஜினி உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளா், புவியியற்துறை,
யாழ் பல்கலைக்கழகம்
usubageo@gmail.com

ஆய்வுச்சுருக்கம்:
வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்துநிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக பௌதிக, மானிட மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது. (Kristjanson, et al., 2005) நிலைத்துநிற்கக் கூடிய வாழ்வாதார உத்திகளும், சொத்துக்களும் வறுமையான மக்களின் வாழ்வாதாரத்தில் சுற்றுச்சூழல்வளங்களின் பங்கினை மிகவும் ஆழமாக ஆராய்வதற்கான ஒருவழியை வழங்குகின்றது. இலங்கையில் குறிப்பாக வடக்குகிழக்கு மக்களின் வாழ்வாதாரமானது மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் உள்ளாகியுள்ளது. முல்லைத்தீவுமாவட்டத்தின் ஒரு பிரதேசசெயலர் பிரிவாகிய ஒட்டுசுட்டான்பிரதேசசெயலா் பிரிவிலுள்ள 27 கிராமமக்களும் 2009ஆம் ஆண்டு நிகழ்ந்த இறுதிக்கட்டயுத்தித்தினால் முழுமையாக தமது உடமைகளை இழந்து இடம்பெயர்ந்து நலன்புரிமுகாம்களில் வசித்துவந்தார்கள். இவர்கள் மீளவும் 2010ஆம் ஆண்டு தமது சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். அவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மிகவும் துன்பப்பட்டார்கள். இந்தவகையில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றிக்கான காரணங்களையும் கண்டறிவதோடு அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தலே இவ் ஆய்வின் நோக்கமாகும். இங்கு 5585 குடும்பங்களில் 3175 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்றார்கள். இவர்களில் 960 குடும்பங்கள் எல்லா கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் எழுமாற்றாக தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் நேரடிஅவதானம் பேட்டிகாணல், குழுநிலை விவாதங்கள் கலந்துரையாடல்கள் போன்ற முறைகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளும் சேகரிக்கப்பட்டு பெறப்பட்ட தரவுகளானது கணனி மூலம் குறிப்பாக Excel Package மூலமும், எளியபுள்ளிவிபரவியல் முறை மூலமும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் பெறப்பட்ட முடிவுகளின்படி மூலதனப்பற்றாக்குறை, வீட்டுவசதிபோதியளவுயின்மை, மலசலகூட வசதிகள்யின்மை, சுயதொழில் வாய்ப்புக்களுக்கான ஊக்குவிப்புவசதிகள் குறைவாக உள்ளமை சேமிப்புபழக்கம்யின்மை, கடன்வசதிகள்குறைவு போன்றன முக்கிய பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றிற்கான தீர்வுகளாக அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இப்பிரதேச மக்களுக்கு வீட்டுவசதிகளையும், மலசலகூட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதோடு ஏற்கனவே உள்ள முயற்சிகளுக்கு ஊக்குவிப்புக்களை செய்தல் வேண்டும். குறைந்த வட்டிவீதத்திலான கடன்வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து இலகுவான தவணைமுறைகளில் அவற்றினை மீளசெலுத்தவழிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். நிலமற்றவர்களுக்கு சொந்தமாக நிலம் கிடைக்க ஆவன செய்தல்வேண்டும். இவ்வாறு செயற்படுத்துவதன் மூலம் ஆய்வுப்பிரதேச பிரச்சினைகளுக்கு ஓரளவேனும் தீர்வினை பெறமுடியும் என்ற நிலையினை இவ் ஆய்வு வெளிக்கொணர்கின்றது.

பிரதான சொற்கள்: வாழ்வாதாரம், மீள்குடியேற்றம், பிரதேச செயலர்பிரிவு, கிராமசேவகர்பிரிவு, வறுமைக்கோடு

## 1. ஆய்வின் அறிமுகம்

வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக

பௌதீக, மானிட மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது. (Kristjanson, et al., 2005). நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார உத்திகளும், சொத்துக்களும் வறுமையான மக்களின் வாழ்வாதாரத்தில் சுற்றுச்சூழல் வளங்களின் பங்கினை மிகவும்

ஆழமாக ஆராய்வதற்கான ஒரு வழியை வழங்குகின்றது. இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரமானது யுத்தம் முடிவடைந்தவுடன் ஏற்படுத்தப்பட்ட மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் உள்ளாகியுள்ளது. அதிலும் குறிப்பாக 2009ம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையில் இறுதியாக

நடைபெற்றயுத்தத்தில் முழுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவும் உள்ளடங்கும். இங்குள்ள மக்கள் இந்த யுத்தகாலப் பகுதியில் முழுமையாக இடம்பெயர்ந்ததோடு உடமைகள், சொத்துக்கள் யாவற்றையும் முழுமையாக இழந்துள்ளனர். இவர்கள் மீளவும் 2010 ஆம் ஆண்டு தமது சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அரசாங்கமும், சர்வதேச தனியார் தொண்டு நிறுவனங்களும் பல்வேறு வகையான வாழ்வாதார உதவிகளை செய்து வந்த போதிலும் மக்கள் அவ்வாழ்வாதார திட்டங்களினால் முழுமையான நன்மைகளை பெற்றுக் கொள்ளவில்லை அல்லது திருப்தியான நிலையை அடையவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. இன்னும் அப்பிரதேச மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர் கொண்ட வண்ணமே உள்ளார்கள். இந்த வகையில் மீள்குடியேற்றத்தின் பின்னர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும், அதற்கான காரணங்களையும் ஆராய்வதாகவே இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

2. ஆய்வின் நோக்கம்

I. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களின் வாழ்வாதார நிலையினைக் கண்டறிதல்.
II. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும்,, அதற்கான காரணங்களையும் கண்டறிதல்.
III. அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

3. இலக்கிய மீளாய்வு

இவ்வாய்விற்காக பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வின் வரையறை கருதி மிக முக்கியமாக இவ்ஆய்விற்கு பயனுடையதாக அமைந்த ஒருசில இலக்கிய மீளாய்வுகள் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் Pyone myat Thu (2012) என்பவர் கிழக்கு தீமோரில் போருக்குப் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட மக்களிடையே நிலத்தின் கிடைப்பனவுத் தன்மை, நிலமுரண்பாடு, நில உரிமைகள், வாழ்வாதார முறைகள், வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற விடயங்களை தனது கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளின் பகுப்பாய்வுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளின் படி குடியேற்றவாசிகள் தமது இடப்பெயர்வு மற்றும் பாதுகாப்பற்ற நில அணுகல் ஆகியவற்றிற்கு ஈடுகொடுப்பதற்காவே உள்ளூரில் பலவிதமான வாழ்வாதாரங்களையும் தேடிக்கொள்வதன் மூலம் மீளெழுச்சி பெறலாம் என்பதை இவ் ஆய்வின் முடிவுகள் காட்டியுள்ளன. Jon.D.unruh (2008) என்பவர் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள குறிப்பாக சோமாலியா, உகண்டா, அங்கோலா, எதியோப்பியா, சைபீரியா போன்ற நாடுகளிலுள்ள போருக்குப் பிந்திய நிலவுரிமைப் பிரச்சினைகளை நிலைத்து நிற்கும் வாழ்வாதார வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் செய்து கிராமிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்கான வழியைக் காட்டியுள்ளார். Benedikt korf (2004) என்பவர் இலங்கையின் போர்க்காலச் சூழலில் மக்களின் வாழ்வாதாரங்கள் எவ்வளவு பாதிக்கப்படுகின்றது. என்பது பற்றியும், கிழக்கு மாகாணத்திலுள்ள நான்கு கிராமங்களை தெரிவு செய்து மிகவேகமாக நிகழ்கின்ற கிராமிய மதிப்பீட்டு நுட்பமுறை மூலம் (Rapid Rural Appraisal – RRA) தர ரீதியிலான ஆய்வு முறையியலைப் பயன்படுத்தி முடிவுகளைப் பெற்றுள்ளார். இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்ச் சூழலில் விவசாயிகளும், மீனவர்களும் கடைப்பிடித்த வாழ்வாதார தந்திரோபாயங்களையும், இவை போர் நடவடிக்கையாளர்களின் தந்திரோபாயங்களோடு எப்படித் தொடர்புபடுகின்றன. என்பதையும் ஆய்வின் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. Marc Lindeberg (2002) என்பவர் குறைவாக அபிவிருத்தி அடைந்த உலகில் குடும்ப மற்றும் சமுதாய மட்டங்களிலான வாழ்வாதார பாதுகாப்பை அளவிடுதல் என்னும் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இவ் ஆய்விற்கு பெறப்பட்ட தரவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு குடும்ப வாழ்வாதாரப் பாதுகாப்புச் சுட்டியின் மூலம் கணிப்பிடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. சமூகங்களும், அவற்றின் உறுப்பினர்களும் ஒன்று கூடி தமது நல்வாழ்விற்கான சிறந்த சுகாதார வசதிகள், ஊட்டச்சத்துவளம், வீடமைப்புத் தேவைகள், கல்வி மற்றும் வாழ்வாதாரத்திட்டங்கள் அவற்றின் பாதுகாப்பு போன்ற விடயங்களில் தமக்கு ஏற்படக் கூடிய தடைகளைச் சிந்தித்து அது பற்றி தமக்குள் விவாதித்து வலுவுள்ள செயல் திட்டங்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டுமென இவ் ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.

Blythe McLennan and Theresa Garvin (2012) ஆகியோர் கொஸ்டறிக்காவில் நிலப்பயன்பாட்டில் காணப்படும் பிரதேசங்களுக்குள்ளான வேறுபாடுகள் வாழ்வாதாரத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பது பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளார்கள். இவ் ஆய்விற்காக பல்வேறு வகையான தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்கும்

அபிவிருத்திக்கும் இடையேயான முரண்பாடுகளைக் கலைந்து ஒரு நிலைத்து நிற்கும் வாழ்வாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்லக்கூடிய நிலப்பயன்பாட்டு மாற்றத்தினை இவ் ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. இவ்வாறாக மேற்கூறப்பட்ட இலக்கிய மீளாய்வுகளின் மூலம் இவ் ஆய்விற்குத் தேவையான தரவு சேகரிப்பு நுட்பங்கள் பகுப்பாய்வு முறைகள் மக்களின் வாழ்வாதாரநிலைமைகள், வாழ்வாதார முன்னேற்றங்கள், தடைகள், தடைகளுக்கான காரணங்கள், வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் போன்ற விடயங்களை பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.


4. ஆய்வுப் பிரச்சினை

வடமாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தினால் அப்பகுதிமக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்கள் யுத்தத்தின் பின்னர் மீளவும் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்களுடைய வாழ்வாதார நடவடிக்கையாக விவசாயமே [பயிர்ச்செய்கை (நெல், வீட்டுத்தோட்டம்), விலங்கு வளர்ப்பு] பெரும்பங்கு வகிக்கின்றது. இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களாகவே உள்ளனர். இதனால் இவர்களுடைய வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதிவளம் இல்லாமை பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. எனவே இவர்களின் தற்போதைய வாழ்வாதார நிலமையினை அறிவதனூடாக இப்பிரதேசத்தில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு இவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யலாம் என்பதே இங்குள்ள ஆய்வுப் பிரச்சினையாகும்.

5. ஆய்வு முறையியல்

5.1 ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் வடமாகாணத்தில் ஐந்து நிர்வாக மாவட்டங்களில் ஒன்றாகிய முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலர் பிரிவுகளுள் உள்ளடங்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவே ஆய்வுப்பிரதேசமாகும். இதன் எல்லைகளாக வடக்கே புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவும், கிழக்கே கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவும், தெற்கே வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவும், மேற்கே மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தினுடைய மொத்தப்பரப்பு 618 சதுர கிலோமீற்றர்களாகும். (61800 கெக்ரேயர்) (District statistical hand book - 2014) இது முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 24 சதவீதமாகும் (District Statistical hand book – 2014). ஆய்வுப்பிரதேசமானது இருபத்தேழு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதுடன் மொத்தமாக நூற்றுப்பதினான்கு கிராமங்களையும் கொண்டுள்ளது. தற்போது இங்கு 5585 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் சனத்தொகையானது 18,288 ஆக காணப்படுகின்றது. இதில் 8962 ஆண்களும் 9326 பெண்களும் ஆக உள்ளார்கள். இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என பல்வேறு மதத்தினரும் வாழ்கின்றனர் (District statistical hand book - 2014).




உரு 1

5.2 தரவுகளும், பகுப்பாய்வு முறைகளும்

ஆய்வு ஒன்றினை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு காரணமாக உள்ள ஆய்வு முறையியலானது ஆய்வுகளின் முக்கியமான பகுதியாக காணப்படுகின்றது. இங்கு தரவுகளின் வகை, தரவுசேகரிக்கும் முறை, தரவுப் பகுப்பாய்வு முறை என்பன முக்கிய பெறுகின்றது. இது ஒரு விபரணப் புள்ளிவிபரவியல் ரீதியான ஆய்வாகும். மொத்த குடித்தொகையில் இருந்து அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர் தெரிவானது எழுமாற்றான மாதிரி எடுப்பு முறையில் நடைபெற்றது. எல்லா கிராம சேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தரவுகள் பெறப்பட்டுள்ளன. 5585 குடும்பங்களில் 3175 குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றார்கள். (District statistical hand book - 2014) இவர்கள் அனைவரும் அரசினால் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் வாழ்வாதாரத் திட்டங்களை பெற்றுக் கொள்கின்றார்கள். இக்குடும்பங்களில் இருந்து மாதிரி எடுப்பு முறை மூலம் 960 குடும்பங்கள் (30 வீதமான குடும்பங்கள்) ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் அளவுசார் தரவுகளும், பண்புசார் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எல்லா கிராமங்களையும் உள்ளடக்கும் வகையில் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நேரடி அவதானம், பேட்டி காணல், கலந்துரையாடல், குழுநிலை விவாதங்கள் போன்ற முறைகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுப் பிரதேசம் தொடர்பான நூல்கள் எதுவும் அண்மைக்காலங்களில் (மீள்குடியேற்றத்தின் பின்னர்) வெளிவராத காரணத்தினால் பிரதேச செயலக புள்ளிவிபரக் கையேடுகள், மாவட்ட புள்ளிவிபரக் கையேடுகள், கிராம சேவையாளர் அறிக்கைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆண்டு நிறைவு மலர்கள் போன்றவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் கணனியில் உள்ளீடு செய்யப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. குறிப்பாக Excel package முறை மூலமும், எளிய புள்ளி விபரமுறை மூலமும் தரவுகள், பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் அட்டவணைகளாகவும், வரைபடங்களாகவும் பெறப்பட்டு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

6. ஆய்வின் முடிவுகள்

நோக்கம் 1

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களின் வாழ்வாதார நிலையினைக் கண்டறிதல்.

ஆய்வுப்பிரதேச மக்களின் வாழ்வாதாரமாக விவசாயமே பிரதான இடத்தினை வகிக்கின்றது. ஆய்விற்கு உட்படுத்திய குடும்பங்களில் (960 குடும்பங்கள்) 947 குடும்பங்கள் விவசாயக் குடும்பங்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் நெற்பயிர்ச்செய்கையில் அதிகளவாக ஈடுபட்டாலும் இதில் 50 வீதத்திற்கும் குறைவானவர்களே வீட்டுத்தோட்டம் போன்ற உபஉணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகிறார்கள். எனினும் ஆய்விற்கு உட்படுத்திய குடும்பங்களில் எல்லாக் குடும்பங்களும் ஏதோ ஒரு வகையான கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகிறார்கள். பெரும்பாலான குடும்பங்கள் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார்கள். அத்துடன் ஆண், பெண் இருபாலாரும் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் கூலிவேலைக்கும் செல்கின்றார்கள். ஓய்வு நேரங்களில் சுயதொழில் முயற்சிகளிலும் (பப்படம், பற்பொடி, மிக்சர் தயாரித்தல்) ஈடுபடுகின்றார்கள். இவ்வாறாக பல்வேறு வாழ்வாதார முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும் அவர்களின் வாழ்வாதாரம் முழுமையான திருப்தி நிலையினை அடையவில்லை. காரணம் யுத்தத்தினால் தமது முழு உடமைகளையும் இழந்தமையால் அதிலிருந்து மீளுவதற்கு சிறிது காலம் அவர்களுக்கு தேவைப்படுகின்றது. குழுநிலை விவாதங்களின் போது இப்பிரதேச மக்களின் வாழ்வாதார நிலமைகளை மேலும் விளங்கிக் கொள்ள முடிந்தது. இம்மக்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படும் உதவிகள் போதாமல் உள்ளதாகவும், சரியான நேரத்தில் தமக்கு கிடைப்பதில்லை எனவும் சரியான இலக்குப் பிரிவினரை அவை சென்றடையவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். தமது வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையிலேயே உதவித் திட்டங்கள் இருக்க வேண்டுமெனவும் குழுநிலை விவாதத்தில் ஈடுபட்ட மக்கள் கேட்டுக்கொண்டார்கள்.

நோக்கம் 2

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், அதற்கான காரணங்களையும் கண்டறிதல்.

ஆய்வுப் பிரதேசத்தில் மக்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்வதில் தடைகள் காணப்படுகின்றமை முக்கிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக இங்குள்ள மொத்த குடித்தொகையில் 56.85 வீதமான குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களாக

காணப்படுகின்றனர். அடிப்படைத் தேவைககளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை திருப்திகரமாக பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். இந்த நிலையில் தமக்கென ஒரு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள போதியளவு மூலதனம் இல்லாமை முக்கிய பிரச்சினையாக உள்ளது. பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு உதவித் திட்டங்களை ஆய்வுப் பிரதேசத்தில் அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் மக்களின்வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையாத நிலையிலையே உள்ளது.

அட்டவணை **I:** உதவிகள் வழங்கும் நிறுவனங்களும் அவற்றின் உதவித் திட்டங்களின் எண்ணிக்கையும்

| | நிறுவனங்கள் | திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Child fund | 01 |
| 2 | Save the Children | 03 |
| 3 | Care | 04 |
| 4 | Forut | 02 |
| 5 | UNDP | 08 |
| 6 | IOM | 03 |
| 7 | FAO | 46 |
| 8 | Muslim Aid | 03 |
| 9 | SLRCS | 15 |
| 10 | CCD (center for Child development) | 04 |
| 11 | OX farm Australia | 04 |

Source : Statistical handbook Mullaitivu. District – 2014

குறிப்பாக உதவி வழங்கும் நிறுவனங்களும், திட்டங்களும் மூலதன உதவிகளை குறிப்பிட்டளவு வழங்கி வந்த போதிலும் அவை முழுமையான வாழ்வாதார முயற்சிகளுக்கும் நிலைத்துநிற்கக் கூடிய வாழ்வாதாரத்திற்கும் போதியளவாகவும், பொருத்தமாகதாகவும் இல்லை. ஆய்வு பிரதேச மக்களில் பெரும்பாலானோர் (ஆய்விற்கு உட்படுத்திய குடும்பங்களில்) விவசாயிகளாகவே உள்ளனர். தமது பிரதான தொழிலான விவசாயத்தை மேற்கொள்வதற்கு மூலதனம் இன்மை, நிலமின்மை, பொருத்தமான உபகரணங்கள் இன்மை, இயந்திரசாதனங்களின் பற்றாக்குறை கோடைகாலங்களில் மேட்டுநிலப்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு நீர்ப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

ஆய்வுப் பிரதேசத்தில் 194 குடும்பங்கள் (மூலம்:Village Profile Data–2014) நிலமற்றவர்களாக உள்ளார்கள் இவர்கள் வாடகை வீடுகளில் வசிப்பதோடு விவசாயம், தோட்டம் போன்றவற்றை மேற்கொள்வதற்கு குத்தகைக்கு நிலங்களை


பெற்றுக்கொள்கின்றார்கள். எல்லா நிலமற்ற குடும்பங்களும் குத்தகை முறைக்கு நிலங்களைப் பெற்று பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட போதியளவு மூலதனங்களை கொண்டிருக்கவில்லை அத்துடன் சிலகாலங்களில் வானிலை பொய்ப்பதால் (மழைவீழ்ச்சி அதிகம், வெள்ளப்பெருக்கு, வரட்சி) பயிரழிவுகளும் ஏற்படுகின்றன. இவர்கள் ஏழைகளாக இருப்பதால் பயிர் அழிவிற்காக முன்கூட்டியே காப்புறுதி வசதிகளை செய்து வைத்திருக்க முடியவில்லை இதனால் அவர்களால் அடுத்த பருவத்தில் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வாழ்வாதார உதவித் திட்டங்களை அட்டவணை 2 இல் அவதானிக்கலாம்.

அட்டவணை 2: வாழ்வாதார உதவித்திட்டங்கள்


| திட்டங்கள் | பயனடையும் குடும்பங்கள் |
|---|---|
| துவிச்சக்கரவண்டி | 1803 |
| நீரிறைக்கும் இயந்திரம் | 792 |
| அரிவு வெட்டும் இயந்திரம் | 381 |
| வாழ்வாதார பொது (ரூபா 25,000 குறைந்த)பண உதவி | 1829 |

Source : Village Profile Data- 2014

உரு 2




ஆய்வுப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்டுள்ள அல்லது செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களில் பெரும்பாலானவை சரியான இலக்குப் பிரிவினைச் சென்றடையாமையும் முக்கிய பிரச்சினையாகும். காரணம் பயனாளிகளை தெரிவு செய்வதில் பாரபட்சம் காட்டுதல், தனிப்பட்ட செல்வாக்கு நிலைகள் காணப்படல் போன்றவாகும். இங்கு வழங்கப்பட்ட வாழ்வாதார முயற்சிகளும், திட்டங்களும் மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை எடுத்துக்காட்டாக இங்கு வீடு கட்டுவதற்காக கொடுக்கப்படும் நிதியின் அளவு போதாதுள்ளது. அத்துடன் அடிப்படைத் தேவையான மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காத நிலையும் இங்கு காணப்படுகின்றது. ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் 483 குடும்பங்கள் தற்காலிக மலசல கூடங்களை பயன்படுத்துவதோடு 57 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகளே இல்லை. இவர்கள் அயலவர்களின் மலசலகூடங்களையும், திறந்த வெளிகளையும் பயன்படுத்துகின்றார்கள். இதனால் இப்பிரதேசங்களில் பல்வேறு வகையான தொற்று நோய்களுக்கு மக்கள் அடிக்கடி உள்ளாகின்றார்கள். இப்பிரச்சினை மழைகாலங்களில் மிக மோசமாக உள்ளதை கள ஆய்வின் மூலம் அவதானிக்க முடிகின்றது. இடப்பெயர்விற்கு முன்னர் பெரும்பாலான குடும்பங்களில் மலசலகூட வசதிகள் காணப்பட்டன. வதிவிடங்கள் அழிவடைந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் இப்பிரதேச மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவை முழுமையாக மக்களுக்குசென்றடையவில்லை.



மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்காத திட்டங்களாலும் இங்குள்ள மக்களின் வாழ்வாதார நிலைகள் முன்னேற்றமடையாதுள்ளது. எடுத்துக்காட்டாக வழங்கப்படும் வீட்டுத்திட்ட நிதியுடன் ஓரளவு வசதியான மக்கள் தமது பணத்தையும் சேர்ந்து தமக்கு பொருத்தமான வீட்டினை அமைத்துக் கொள்ள அனுமதிக்காத நிலை காணப்படுகின்றது.

வாழ்வாதார உதவித்திட்டங்களில் ஆடு, மாடு, கோழி வளர்ப்புத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினை பராமரிப்பதிலும் வளர்த்து பயனடைவதிலும்

மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் எடுத்துக் காட்டாக இவற்றிற்கான உணவுகளை பெற்றுக் கொள்ளல், வதிவிடங்களை அமைத்தல், நோய் ஏற்பட்ட காலத்தில் பராமரித்தல் போன்ற பிரச்சினைகளை மக்கள் எதிர் நோக்கி உள்ளனர். சிலவேளைகளில் நோய்காரணமாக இவை இறக்க நேரிட்டால் மீண்டும் அவற்றினை பெற்றுக் கொள்வதில் மக்கள் இடர்களை எதிர்நோக்குகின்றார்கள் ஆய்வுப் பிரதேச 99 வீதமான மக்களிடையே சேமிப்பு பழக்கம் காணப்படாமையும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதற்கு வருமானப்பற்றாக்குறை முக்கிய காரணமாகும்.

அட்டவணை 3 : சுயதொழில் முயற்சிகள்

| சுயதொழில்முயற்சிகள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கோழி | 924 |
| ஆடு | 327 |
| மாடு | 543 |
| துவிச்சக்கரவண்டி திருத்துதல் | 107 |
| மிக்சர் தயாரித்தல் | 81 |
| பப்படம் தயாரித்தல் | 63 |
| தையல்வேலை | 257 |

மூலம் : கள ஆய்வு 2014

உரு 3

நோக்கம் 3

7. தீர்வுகளையும், ஆலோசனைகளையும் முன்வைத்தல்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும், நிலைத்து நிற்பதற்கும் அவர்களுக்கு பொருத்தமான உதவிகளையே செய்து கொடுத்தல் வேண்டும். விவசாயக் குடும்பங்களுக்கு பயிர்ச்செய்கைக்குரிய காணிகளை நிரந்தரமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளைள எடுத்தல் வேண்டும். காணி உறுதிகளை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். கடனாகவோ, மானியமாகவோ நிதி உதவிகளையும், இயந்திர சாதனங்களையும் உபகரணங்களையும் வழங்குதல் வேண்டும். விவசாயிகளுக்கு காப்புறுதி வசதிகளை அறிமுகப்படுத்துதல் அவசியமாகும். இதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு உணர வைப்பதன் மூலம் விவசாயிகளை நன்மை அடைய வைக்கலாம்.

விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் குறிப்பாக ஆய்வுப் பிரதேசத்திலுள்ள குளங்களையும் கால்வாய்களையும் புனரமைத்து நீர்ப்பாசன கட்டமைப்பினை சிறந்த முறையில் ஏற்படுத்த வேண்டும். நீர்ப்பாசனம் இல்லாமையால் பயன்படுத்த முடியாமல் இருக்கும் காணிகளையும் இதன் மூலம் நன்மையடைய வைக்கலாம்.

சுயதொழில் வாய்ப்புக்களை மேலும் அதிகரித்தல் வேண்டும். கோழி, ஆடு, மாடு வளர்ப்பவர்களுக்கு அதனை ஊக்குவிப்பதற்கான வழி முறைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். குறிப்பாக இவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு (முட்டை, பால்) நியாயமான உத்தரவாத விலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தி மக்கள் சரியான இலாபத்தினை

அடைந்து பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைய வைக்க வேண்டும். ஆய்வுப்பிரதேச மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை போதாமையால் குறைந்த விலையில் கால் நடைகளை வழங்கி அவர்களை ஊக்குவிக்க முடியும். மக்கள் தவணை அடிப்படையில் பணத்தை செலுத்தக் கூடிய வழிகளில் அவர்களுக்கு கால்நடைகளை வழங்கலாம். அத்துடன் அவற்றிற்குரிய உணவுகளையும் கட்டுப்பாடான விலையில் பெற்றுக் கொள்ள வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். மூலதன வசதிகளைப் பொறுத்த வரையில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கென விசேட கடன் திட்டங்களை குறைந்த வட்டி வீதங்களில் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

சுகாதார வசதிகளையும் இங்கு அதிகரித்தல் அவசியமாகும். குறிப்பாக மலசலகூடங்கள் இல்லாத குடும்பங்களுக்கு மலசலகூடங்களை கட்டுவதற்குரிய உதவிகளை செய்தல் வேண்டும். அல்லது மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்தல் அவசியமாகும். இது ஓர் அத்தியவசிய தேவை என்பதனால் அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களுக்கு இத்தேவையினை காலம் தாழ்த்தாது செய்து கொடுத்தல் வேண்டும்.

படித்து வேலைவாய்ப்புக்கள் இன்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்காக சிறுகைத்தொழிற் சாலைகளை உருவாக்கி அதன் மூலம் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி கொடுக்கலாம். குறிப்பாக பால் உற்பத்திப் பொருட்கள் செய்தல், தும்புத்தொழில்களை உருவாக்கல், பனம் பொருட்களின் உற்பத்திகளை மேற்கொள்ளல், கைப்பனிப் பொருட்களின் உற்பத்தி போன்றவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதோடு வருமானமும் கிடைக்க வழி ஏற்படும்.

8. முடிவுரை

இவ் ஆய்வின் மூலம் ஓட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் மக்கள் எதிர் நோக்கியுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றினை விட இப்பிரதேச மக்கள், வாழ்வாதாரத்தோடு இணைந்த சிறிய, சிறிய பிரச்சினைகளையும் நாள் தோறும் எதிர்நோக்கிய வண்ணமே உள்ளார்கள் யுத்தத்தினால் மக்கள் தமது உடமைகள் முழுவதையும் இழந்தமையால் உடனடியாக அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதுள்ளது. இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து தூர நோக்குடன் கூடியதான செயற்திட்டங்களையும், விழிப்புணர்வுத் திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லல் அவசியமானதாகவும், காலத்தின் தேவையாகவும் உள்ளது. அத்துடன் மக்களும் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தமது செயற்பாடுகளை செய்தல் வேண்டும். அவ்வாறான ஒரு

சூழ்நிலையில் தான் நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையே இவ்ஆய்வு கூறுகின்றது.

**9. Acknowledgment**

இவ்வாய்வினை மிகவும் சரியாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிப்பதற்கு தரவுகளையும் தகவல்களையும் வழங்கிய ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் மற்றும் திட்டமிடற் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.

**REFERENCES**

1. Blythe McLennan and Theresa Garvin. (2012). Intra – regional Variation in Land use and livelihood change during a forest trasition in costa Rica's dry north west.*Land use policy 29,*PP 119-130
2. Pyone myat Thu. (2012). Access to land and Livelihoods in post – conflict Timor – Leste.*Australian Geagrapher vol.43 (2)* PP. 197 – 214
3. Marc Lindenberg. (2002). Measuring Household Livelihood security at the family and community Level in the developing world.*world Development vol.30(2),* PP 301 – 318.
4. Jon.D.Unruh. (2008). To ward sustainable livelihoods after war: Reconstituting rural land tenure systems. *Natural Resources Forum 32*, PP 103 – 115.
5. Patricia kristjanson, Maren Radeny, lsabelle Baltenweck, Joseph Oguta, An Notenbaert. (2005). Livelihood mapping and poverty correlates at a meso –Lavel in Kenya.*Food policy 30*, PP 568 – 583.
6. Benedikt korf. (2004). war, livelihoods and vulnerability in Sri Lanka. *Development and change Vol. 35 (2),* PP 275 – 295.
7. *Mullaitive district statistical hand book*, (2014). PP. 01-118., Mullaitivu: District secretariat.
8. *Village profile*. (2014). Oddusuddan Divisional Secretariat Division.